2024 – ஜீன் மாதம் 20– ஆம் தேதி வியாழக்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 34 / 2020*

*2024–ம் ஆண்டு ஜீன் மாதம் 20– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய R W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | R W 1, குருநாதன் |
| தகப்பனார் பெயர் | : | வீரமுத்து |
| ஊர் | : | பெரம்பலூர் |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர், மருவத்தூர் |
| வயது | : | 50 |

தேதி: **20.06.2024.**

**நீதிமன்ற அனுமதியின் பேரில் வாய் மொழியாக முதல் விசாரணை:–**

மருவத்தூர் காவல் நிலைய குற்ற எண் 232/2019 வழக்கில் இரண்டு வாகனங்கள் ஈடுபட்டுள்ளன. அதில் ஒரு வாகனம் TN 68 Y 3133 என்ற ஜே சி பி வாகனம், அந்த வாகனத்தை ஆய்வு செய்து மோட்டார் வாகன ஆய்வாளர் கொடுத்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை **எ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. இந்த விபத்தில் காயம்பட்ட ராஜ்குமார் ஓட்டிச்சென்ற TN 46 F 5841 என்ற மோட்டார் சைக்கிளை ஆய்வு செய்ததற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை எங்கள் கோப்பில் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் சம்பவ இடம் குறித்து தயார் செய்யப்பட்ட மாதிரி வரைபடம் என்றால் சரிதான். அந்த மாதிரி வரைபடம் **எ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. இந்த விபத்து வழக்கில் இன்று வரை குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்யப்படவில்லையென்றால் சரிதான். அந்த இறுதி அறிக்கை தயார் செய்தால் மட்டுமே விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று தெரியவரும் என்றால் சரிதான். காயம்பட்ட ராஜ்குமாரின் ஓட்டுநர் உரிமம் எங்கள் கோப்பில் உள்ளதா என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை:– ( மனுதாரர் தரப்பில்)**

விபத்தில் சம்மந்தப்பட்ட இருசக்கர வாகனம் மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பப்ட்டுள்ளது, அதற்கான வேண்டுகோள் கடிதம் எங்கள் கோப்பில் உள்ளது. விபத்தை ஏற்படுத்திய ஜே சி பி வாகனத்தின் ஓட்டுநரை கைது செய்து பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றால் அதற்கான ஆவணம் நான் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ள கோப்பில் இல்லை. நான் கொண்டு வந்துள்ள கோப்பான வழக்கு நாட்குறிப்பில் 22.12.2019–ம் தேதி 19.00 மணிக்கு கைது செய்யப்பட்டதாக குறிப்பு உள்ளது. எ.சா.ஆ.2 மாதிரி வரைபடத்தில் கிழக்கு – மேற்கு சாலையில், சாலையின் தெற்கு பக்க ஓரமாக சம்பவ இடம் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம்/–சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**